# ஒவ்வொரு காலத்திலும் பரிசுத்த ஆவியானவர்

வெளி 2:11 "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன். ஒவ்வொரு சபையின் காலத்திலும் இது கூறப்படுகிறது. ஆவியானவர் சபைகளுக்குக் கூறுவதை எல்லா மனிதரும் கேட்டு அறிந்துகொள்ளவே முடியாது. "அப்படியிருந்தும் தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம். இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரிய வைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்தி- ருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது". (1 கொரி 2:6-16) "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது, காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள். கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால்

*உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாகக் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே. உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்". (மத் 13:13-16) "இயேசு அவர்களை நோக்கி; தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்தி- ருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை. அவரே என்னை அனுப்பினார்.என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாம- ருக்கிறீர்கள்? என்உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா? நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்". (யோவான் 8:42-44).*

*தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கும் திறமையை தேவனே கொடுத்தாலன்றி, எந்த மனிதனும் அவனாகவே அவைகளுக்குச் செவி கொடுக்க முடியாது என்பதை மேற்கூறிய வசனங்களின் வாயிலாக அறியலாம். "இயேசு அவனை நோக்கி; யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்தி- ருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்". (மத் 16.17). இவ்வசனங்களை ஒன்று சேர்ந்து சிந்தித்தால். ஒவ்வொரு காலத்திலுண்டாகும் ஒரு பிரத்யேகமான கூட்டம் மாத்திரம் அக்காலத்துக்குரிய தேவனுடைய வெளிப்படுத்துதலைப்பெற்று, ஆவியானவர் கூறுவதைக் கேட்டறிந்து கொள்ள முடியும் என்பது புலனாகிறது. தேவனுக்குச் செவி கொடுக்காதவர்கள் தேவனாலுண்டானவர்களல்ல (யோவான் 8:42-44). அப்படியெனில், அவருக்குச் செவி கொடுக்கிறவர்கள் அவருடையவர்களாயிருக்கின்றனர். இவர்கள் தேவனால் பிறந்து, தேவனுடைய ஆவியைப் பெற்று, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள். 1 கொரி 2:6-16, இவர்களைத் தான் விவரிக்கிறது.*

*"எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதப்பட்டிருக்கிறதே" (யோவான் 6:45) என்று இயேசு கூறுகிறார். ஆனால் ஏசாயா தீர்க்கதரிசி, "உன்பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" (ஏசா 54:13) என்று உரைக்கிறான். "எல்லாரும் என்ற பதம் தேவனுடைய பிள்ளைகளைக் குறிக்கிறது. அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, அவரால் போதிக்கப்படுவார்கள்.*

*அந்நிய பாஷை பேசுதல் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அடையாளமல்ல என்பதை இதன் மூலம் நாமறியலாம். ஆவியானவர் எந்த ஒரு சபையின் காலத்திலும், "ஆவியானவர் சொல்லுகிறதை நாவுள்ளவன் சொல்லக்கடவன்" என்று கூறினதேயில்லை. ஆவியானவர் சொல்லுகிறதைக் கேட்பதே ஆவியைப் பெற்றதன் அடையாளம். சத்திய ஆவி வரும்போது சத்தியத்தைப் போதிப்பாரென்று இயேசு கூறினார். "அவர் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்". (யோவான் 14:26). அவர் சொன்னது நிறைவேறியது, சுவிசேஷங்கள் பரிசுத்த ஆவியின் உதவியைக் கொண்டு எழுதப்பட்டன, இயேசு கூறின அதே வார்த்தைகளை ஆவியானவர் நினைப்பூட்டினார். ஆகையால்தான் சுவிசேஷங்கள் பிழையின்றி எழுதப்பட்டன. அது மாத்திரமின்றி, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு இன்னும் அதிகமான சத்தியங்களைப் போதித்தார். பவுலுக்கு அநேக சத்தியங்கள் அவரால் வெளிப்படுத்தப்பட்டன. "மேலும் சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷனுடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றது மில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்", (கலா 1:11-12). ஆம் அவன், பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டான்.*

*இயேசு இவ்வுலகத்தி- ருந்த போது, நிக்கோதேமு அவரைக் காணவந்தான். அவன் "ரபீ நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்" என்றுரைத்தான். அவர் நிக்கோதேமுக்குப் பதிலுரைத்ததை இவ்வாறு விவரணம் செய்யலாம். நான் ஒரு போதகன் அல்ல, "நான் பாவத்திற்கென்று பலிசெலுத்தப்படும் ஆட்டுக்குட்டி, நான் கொடுத்த ஜீவனின்மூலம் ஒருவன் மறுபிறப்படைவான். ஆனால் இனிவருபவர் போதகராயிருப்பார். அவர்தான் பரிசுத்த ஆவி". இவ்வுலகத்தில் இயேசு ஆட்டுக் குட்டியாகவும் தீர்க்கதரிசி யாகவுமிருந்தார். அவருடைய ஆவி திரும்பவும் சபையில் வந்த போது அவர் போதகராகச் சகல சத்தியத்திலும் அதை வழி நடத்தினார்.*

*ஒவ்வொரு காலத்திலும் "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்னும் சத்தியம் அளிக்கப்படுகிறது. ஆனால், பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றவனே அக்காலத்திற்குரிய வெளிப்பாட்டை அறிய முடியும்.*

*அந்நிய பாஷையில் பேசுவது மாத்திரமே ஒருவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றதன் அடையாளம் என்று பெந்தேகோஸ்தேகாரர்கள் கூறுவதன் மூலம் தேவனுடைய மனிதர்களான நாக்ஸ் (*Knox), *மூடி* (Moody), *டெய்லர்* (Taylor), *கோபோர்த்* (Goforth) *என்பவர்கள் பரிசுத்த ஆவி பெற்றதை அவர்கள் மறுத- க்கின்றனர்;*

அல்லது அவர்கள் அந்தரங்கமாக அந்நியப் பாஷை பேசியிருக்க வேண்டுமென ஊகிக்கின்றனர். அது உண்மையல்ல. அந்நிய பாஷை ஆவியின் நிறைவின் அடையாளமல்ல. 1 கொரி. 12ம் அதிகாரம் கூறும் ஆவியின் ஒன்பது வரங்களில் இது ஒன்றாகும். அந்நிய பாஷையைப் பேசிக்கொண்டே பரிசுத்த ஆவியைப் பெற்றதாகவோ அல்லது அந்நிய பாஷையைப் பேசுவதன் மூலம் பரிசுத்த ஆவியைப் பெற்றதாகவோ வேதத்தில் சான்றில்லை. "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்ட பிறகு, வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" என்றும், பிறகு தீர்க்கதரிசனம் உரைத்தார்களென்றும் வேதம் தெளிவாகக் கூறுகிறது.

அந்நிய பாஷை பேசும் அனைவரும், உண்மையான ஆவிக்குரிய அந்நிய பாஷை பேசுகின்றனர் என்ற எண்ணம் மக்களிடையே பரவியிருக்கிறது. மந்திரவாதிகள் மண்டை ஒட்டி- ருக்கும் இரத்தத்தைக் குடித்து, அந்நிய பாஷை பேசி, அதன் அர்த்தத்தை விவரித்து, தீர்க்கதரிசனம் உரைப்பதை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் அந்நிய பாஷையிலும் எழுதுகின்றனர். அந்நிய பாஷை பேசுதல் பரிசுத்த ஆவியைப் பெற்றதன் அடையாளமாயிருப்பின், ஒவ்வொரு அந்நிய பாஷையும் தேவனால் உண்டாயிருக்க வேண்டும். ஆனால், தவறான அந்நிய பாஷை சாத்தானிடத்திடமிருந்தும், உண்மையான அந்நிய பாஷையை தேவனிடத்தி- ருந்தும் பெறுகிறோமென்று மக்கள் ஒப்புக் கொள்கின்றனர். அப்படியெனில், எது உண்மையான அந்நிய பாஷை என்பதை நாம் எங்ஙனம் அறிவோம்? பாஷையின் அர்த்தத்தை யார் புரிந்து கொள்கின்றனர்? தவறான அந்நிய பாஷையைப் கண்டுபிடிக்க யாரிடத்தில் பகுத்தறிவின் வரமுண்டு?

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறும்போது, அந்நிய பாஷை பேசவேண்டும் என்று வேதம் கூறவில்லை என்பதை பெந்தேகோஸ்தே வேத பண்டிதர்களும் ஒப்புக் கொள்கின்றனர். அப்போஸ்தலர் காலத்தில், மக்கள் ஐந்து முறை பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட போது, மூன்று முறை அந்நிய பாஷை பேசினர் என்று அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் குறித்திருக்கிறபடியால், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அந்நிய பாஷை அடையாளமாயிருக்கிறது என்று அவர்கள் ஊகிக்கின்றனர். இரண்டுவிதமான அந்நிய பாஷைகளுண் டென்றும், அவைகளிலொன்று பரிசுத்த ஆவியைப் பெறும்போது பேசப்படு கிறதென்றும், மற்றது, விசுவாசிக்கும் போது அந்நிய பாஷையின் வரம் பெற்று அடிக்கடி பேசப்படுமென்றும், வேதத்தின் ஆதாரமின்றி இவர்கள் கூறுகின்றனர். அல்லாமலும், ஒருவன் பரிசுத்த ஆவியைப் பெற்றதின் அடையாளமாக ஒரு முறையாவது அந்நிய பாஷையில் பேசவேண்டுமென்றும், அதற்குப் பிறகு அவன் அவ்வாறு செய்ய அவசியமில்லையென்றும் எண்ணுகின்றனர், இதற்கும் வேதத்தில் சான்றில்லை. வேதத்தில் காணப்படாத எவையும் தேவன் கூறவில்லை.

*தேவனுடைய வார்த்தையோடு எதையாகிலும் கூட்டும் மனுஷனுக்கு ஐயோ! அந்நிய பாஷையைக் குறித்து வேதம் உரைக்கிறதை அவர்கள் முழுவதும் அசட்டை செய்கிறார்கள். மனுஷ பாஷையொன்றும், தூதர் பாஷையொன்றும் உண்டென்று 1 கொரி. 13ம் அதிகாரம் கூறுகிறது. மனுஷ பாஷை எல்லாரும் புரிந்துகொள்ளும் பாஷையாகும். தூதர் பாஷையை யாரும் புரிந்து கொள்ள முடியாது. தூதர் பாஷையைப் பேசி பரிசுத்த ஆவியைப் பெறுவதாக நவீன பெந்தேகோஸ்தேகாரர் கூறுகின்றனர், பரிசுத்த ஆவியைப் பெற்ற மக்கள், அவிசுவாசிகளும் புரிந்துகொள்ளும் பாஷையில் பேசினரென்று அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் (2ம் அதிகாரம்) எழுதப்பட்டிருக்கிறது.*

*மக்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பிறகு, அவரே போதகராக சகல சத்தியத்தையும் போதிப்பார் என்று தேவன் கூறுகிறார். இவர் உள்ளே வாசம் செய்யும் போதகர்; வெளிப்புறமாகக் காணும் போதகரல்ல. அவர் உள்ளே வாசம் செய்யாவிட்டால், சத்தியத்தை நாம் தினந்தோறும் கேட்டாலும் அதன் வெளிப்பாடுகளைப் பெறாததனால் நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. பவு- ன் காலத்திலும், சத்தியத்தை ஏற்றுக்கொள்வதே ஆவியானவர் உள்ளே வாசம் செய்ததன் அடையாளமாயிருந்தது. ஆவியைப் பெறாதவர்கள், மாம்ச சிந்தையுள்ளவர்களாக சத்தியத்தைக் கேட்டு, அதற்குத் தவறான அர்த்தம் கொடுத்து, பாவத்தில் பிரவேசித்தனர்.*

*பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினபோதும், கொர்நே- யு வீட்டில் புறஜாதிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றபோதும், மக்கள் அந்நிய பாஷையில் பேசினதால், அதுவே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அடையாளமென்று நினைக்க வழியுண்டு. ஆனால் இவ்விரு சமயங்களிலும், அவர்கள் பேசின அந்நிய பாஷைகளைக் கூடியிருந்த மக்கள் புரிந்து கொண்டனர். இது நவீன பெந்தேகோஸ்தே கூட்டங்களில் காணப்படும் பாபே- ன் குழப்பத்தினின்று வித்தியாசப்பட்டது. அந்நிய பாஷைகளல்லாது, மற்றது ஆவிக்குரிய வரங்களைப் பெற்ற மக்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறவில்லையா? ஆவிக்குரிய வரங்கள் ஒன்பதிலும், அந்நிய பாஷை பேசுவது மிகவும் குறைந்த வரமாகும். இதைக் காட்டிலும் மேலான வரங்களைப் பெற்றவர்களை நாம் நன்றாக அறிந்திருப்பதால், பெந்தேகோஸ்தேகாரரின் போதனையை நாம் முற்றிலும் நிராகரிக்க வேண்டும்.*

*வேதம் கூறாத எதையும் கூறுவது தவறாகும். ஒவ்வொரு காலத்தி- ருக்கும் உண்மையான சபைக்கு அந்தக் காலத்துக்குரிய சத்தியத்தைப் போதிப்பதே பரிசுத்த ஆவியானவரின் செயலாகும். சத்தியம் போதிக்கப்பட வேண்டுமாயின் பரிசுத்த*

ஆவியானவர் மனிதனுக்குள் வாசம் செய்ய வேண்டும். ஏழு சபையின் காலங்களில் நேர்ந்த சம்பவங்கள் இதை வெளிப்படுத்துகின்றன.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதை விவரிக்க விரும்புகிறேன், இது என்னுடைய சொந்த ஆலோசனையல்ல; தேவன் இதை வெளிப்படுத்துகிறார்.

நான் நடத்தும் கூட்டங்களில், செய்திக்குப் பிறகு, முன்வந்து பரிசுத்த ஆவியைப் பெற மக்களை நான் அழைப்பதுண்டு. முன்வந்தவர்கள் மறுபடியும் பிறந்தவர்களானதால், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதற்காகவே அவர்களை அழைக்கிறேன் என்று என்னுடைய பெந்தேகோஸ்தே நண்பர்கள் எண்ணி, அந்நிய பாஷை பேச அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர், இதன் காரணமாக மக்களிடையில் குழப்பம் நேரிடுகிறது. பாவமன்னிப்படையாதவன் பரிசுத்த ஆவியால் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட நான் அழைக்கிறேன். இதுதான் மறுபிறப்பின் அர்த்தம். பெந்தேகோஸ்தே காலத்தில் சபையுண்டான போது, இதுவே நேர்ந்தது, ஆவியினால் பிறப்பதே பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுவதாகும். இவையிரண்டும் ஒன்றே.

பாப்டிஸ்டுகள் விசுவாசிக்கும் போதே பரிசுத்த ஆவியைப் பெறுவதாகக் கூறுவது சரியல்ல. விசுவாசித்த பிறகு ஒருவன் பரிசுத்த ஆவியைப் பெறுகிறான். "நீங்கள் விசுவாசிகளானபோது (ஆங்கிலத்தில் Since yebelieved), பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள், பரிசுத்த ஆவி உண்டு என்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்; அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான், அதற்கு அவர்கள். யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல், யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்- மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான், அதைக்கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். (அப் 19: 2.6). நாம் விசுவாசித்த பிறகு தான் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். பவுல் அப்போஸ்தலன் இதைக் குறித்து எபேசு சபைக்கு எழுதுகிறான். "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு (ஆங்கிலத்தில் after that ye heard the word of truth) விசுவாசிகளான போது (ஆங்கிலத்தில் after that ye believed) வாக்குத் தத்தம்

பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்". (எபே 1.13), கிறிஸ்துவின் ஆவியைப் பெறும்போது, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறோம், அவருடைய ஆவியைப் பெறும்போது, நாம் மறுபிறப்பு அடைகிறோம். அவருடைய ஆவியைப் பெற்று, நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுகிறோம். விசுவாசித்த பிறகு ஒருவன் பரிசுத்த ஆவியைப் பெறுகிறான். இது எக்காலத்திலும் மாறுவதில்லை, பரிசுத்த ஆவியைப் பெறும் முறையைப் பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு அறிவித்தான். "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப் 2.38).

யோவேல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டபடியே, தேவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியை மாம்சமான யாவர் மேலும் ஊற்றினார். இதற்கு முன்பாக பரிசுத்த ஆவி இவ்விதம் ஊற்றப்படவில்லை, அன்று முதற்கொண்டு, மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும் ஒவ்வொருவனையும் பரிசுத்த ஆவியினால் நிரப்ப தேவன் கடமைப்பட்டிருக்கிறார். "நீங்கள் மறுபடியும் பிறந்து, பிறகு பரிசுத்த ஆவியினால் நிறையப்படவேண்டும்" என்று பேதுருவோ, அல்லது மற்ற அப்போஸ்தலர்களோ கூறவில்லை.

அடுத்த முறை பரிசுத்த ஆவி விழுந்தபோது சம்பவித்ததைக் கவனியுங்கள். "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டினத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். பி- ப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரி- ருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களைவிட்டுப் புறப்பட்டது. அநேகத் திமிர்வாதக்காரரும் சம்பாணிகளும் குணமாக்கப் பட்டார்கள், அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று, சீமோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக் காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்னு சொல்- , சமாரியா நாட்டு ஜனங்களை பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி,சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவி கொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களை பிரமிக்கப் பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய"நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பி- ப்பு பிரசங்கித்ததை

*அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரிகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பி- ப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும், பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். சமாரியர் வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபோது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருக்கிறவர்களாகக் கண்டு அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்" (அப் 8.5-17) 12-ம் வசனத்தின்படி, அவர்கள் வசனத்தை விசுவாசித்தார்கள். அதன் பின்பு கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்றாலும், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்று 16-ம் வசனம் கூறுகிறது. விசுவாசித்து, சரியான முறையில் ஞானஸ்நானம் பெற்ற பிறகு தான் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். பரிசுத்த ஆவியைப் பெற பேதுரு கூறின முறையோடு இது ஒத்திருக்கிறது.*

*"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று" (கலா 3:13-14) என்று பவுல் கூறுகிறான். "ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம்" மறுபிறப்பைக் குறிக்கிறதென்றும், "ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தம்" பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறதென்றும், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டவை என்றும் கூறுதல் தவறாகும். இதைப் பின்வருமாறு அர்த்தங்கொள்ள வேண்டும். இயேசு சிலுவையில் மரித்து, அவருடைய மரணம் உயிர்த்தெழுதல் இவைகளின் மூலமாய், ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் புறஜாதிகளின் மேல் வந்தது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் புறஜாதிகளுக்குக் கிடைக்கும்படி இப்படியாயிற்று.*

*"நீங்கள் மறுபடியும் பிறந்து, பிறகு பரிசுத்த ஆவியைப் பெறுங்கள்" என்று பவுல் கூறியதாக வேதத்தில் எங்கும் காணப்படவில்லை. சில வசனங்களுக்குத் தவறான அர்த்தங் கொடுத்து, அவ்வாறு வேதத்தி- ருப்பதாகச் சிலர் ஊகித்துள்ளனர். ஆனால் வேதம் ஒருக்காலும் அவ்விதம் கூறவில்லை. இயேசு கிறிஸ்துவும் இப்படி எங்கும் சொல்லவில்லை. கீழ்க்கண்ட வசனங்களை விவேகத்தோடு படியுங்கள். "பண்டிகையின்*

கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு; ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்தி- ருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" (யோவான் 7:37-39) ஒவ்வாரு விசுவாசியும் தன் தாகத்தைக் தீர்க்க விசுவாசத்தோடு இயேசு வண்டை வரும்போது, ஜீவத் தண்ணீருள்ள நதிகள் அவனுடைய உள்ளத்தி- ருந்து பாயுமென்று இவ்வசனம் திட்டவட்டமாய் கூறுகிறது. இதுவே பெந்தெகோஸ்தேயின் அனுபவமாயிருந்தது. இதை மனதில் வைத்துக் கொண்டு பின்வரும் வசனங்களைப் படியுங்கள். "நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குதா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊருகிற நீரூற்றாயிருக்கும் என்றார்". (யோவான் 4:10-14). ஜீவத் தண்ணீரைக் குறித்து இவ்வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இது "நதிகள்" என்று அழைக்கப்படாமல் "நீரூற்று" என்று அழைக்கப்படுகிறது. "நீரூற்று" பரிசுத்த ஆவியினால் நித்ய ஜீவனைப் பெறுவதையும். "நதிகள்" (அதிக சக்தி வாய்ந்ததால்). பரிசுத்த ஆவியினால் வல்லமையைப் பெறுவதையும் குறிக்கின்றன என்னும் தவறான அபிப்பிராயமுண்டு. இவையிரண்டும் ஒரே அனுபவம்தான். பரிசுத்த ஆவி வல்லமையையும் ஜீவனையும் கொடுக்கிறது. அது பெந்தேகோஸ்தே நாளில் இறங்கிவந்தது.

நாம் வசனத்தின் உண்மையான அர்த்தத்தில் சாராமல், மனித அறிவின் விளக்கவுரையில் நம்பிக்கை கொண்டால், தவறு நிச்சயமாக ஏற்படும். நமக்கு வசனம் மாத்திரம் ஆதாரமாயிருக்க வேண்டும். நன்றாக கவனியுங்கள். பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப் 2.38) என்றான். பவுல், "நீங்கள் விசுவாசிகளானபோது (பிறகு) பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா" (அப் 19.2) என்று கேட்டான். மக்கள் பாவத்தினின்று மனந்திரும்பி, தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுகின்றனர். அவர்கள் தொடர்ந்து பரிசுத்த ஆவியைப் பெறுவதில்லை. பரிசுத்த ஆவியை முடிவில் பெற நாம் விசுவாசிக்கவேண்டும். அதைப் பெறுவதற்கு, இயேசுவை விசுவாசிப்பதும் முதல்

படியாகும். ஆனால் மக்கள் அதோடு நின்றுவிடுகின்றனர்; அல்லது ஞானஸ்நானத்தோடு நின்று விடுகின்றனர்; அல்லது விசுவாசித்து அதோடு நின்று விடுகின்றனர். விசுவாசிக்கும் போது எவரும் பரிசுத்த ஆவி பெறுவதில்லை. விசுவாசித்த பிறகு மாத்திரமே பரிசுத்த ஆவியைப் பெறமுடியும். இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் பரிசுத்த ஆவியைப் பெற முடியாது. விசுவாசத்தில் தொடர்ந்து ஜீவித்து அதைப் பெறவேண்டும். பெந்தேகோஸ்தே அனுபவத்தை அநேகர் அடையாததனால், வல்லமையற்றவர்களாக விளங்குகின்றனர். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தைவிட்டு வெளிவந்தும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரிக்காதது போன்று இவர்களும் பரிசுத்த ஆவியைப் பெறுவதனாலுண்டாகும் இளைப்பாறுத- ல் பிரவேசிக்கவில்லை. சுமார் இருபது லட்சம் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு வெளி வந்தனர். எல்லாரும் ஒன்றாகப் பிரயாணம் செய்து, தேவனுடைய அதிசயங்களைக் கண்டு, ஒரே மன்னாவைப் புசித்து, பிளந்த கன்மலையி- ருந்து தண்ணீரைப் பகர்ந்து பக- ல் மேகஸ்தம்பத்தையும் இரவில் அக்கினிஸ்தம்பத்தையும் பின்தொடர்ந்தனர். ஆனால் இரண்டுபேர் மாத்திரம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தையடைந்தார்கள். இவ்விரண்டுபேர் மாத்திரம் உண்மையான விசுவாசிகள். மற்றவர்கள் அவிசுவாசத்தின் காரணத்தால் அந்த தேசத்தில் பிரவேசிக்க முடியவில்லை (எபி 3.19). பிரவேசிக்காதவர் அனைவரும் அவிசுவாசிகளே. இவ்விரு சாராருக்குமிடையே உண்டாயிருந்த வித்தியாசமென்ன? விசுவாசிகள் தேவனுடைய வாக்குத்தத்தத்தில் உறுதியாய் நின்றார்கள், வேவு பார்த்துவந்த பத்துபேரின் இருதயம் காதேஸ்பர்னெயாவில் சேர்ந்தபோது, யோசுவாவும் காலேபும் தளராமல் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, “நாங்கள் அந்த தேசத்தை நிச்சயமாய் சுதந்தரித்துக்கொள்வோம்” என்று கூறினார்கள். “நான் அந்த தேசத்தை உங்களுக்குச் சுதந்தரமாக கொடுத்தேன்” என்று கர்த்தர் கூறியதை அவர்கள் முற்றிலும் நம்பினார்கள். தேவனுடைய வல்லமையையும், உத்தமத்தையும், விடுதலையளிக்கும் தன்மையையும் அவர்கள் கண்டும், அவிசுவாசங் கொண்டவர்களாகி இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. இந்த இளைப்பாறுதல் பரிசுத்த ஆவியைப் பெறுவதனாலுண்டாகும் இளைப்பாறுதலுக்கு முன்னடையாளமாயிருக்கிறது. இந்தக் காலத்திலும் வெகுசிலர் மாத்திரம் விசுவாசத்தின் பாதையில் தொடர்ந்து பரிசுத்த ஆவியைப் பெறுகின்றனர்.

நான் இனிக் கூறப்போவது ஒருக்கால் உங்களை உணர்ச்சி வசப்படுத்தும். என்றாலும், நான் தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும், தேவன் என்னை அனுப்பின ஜனத்திற்கும் உத்திரவாதமுள்ளவனானபடியால், நான் கூறவேண்டு மென்று அவர் சொல்வதை, பயபக்தியோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*"பிதாவானவர் எனக்குக் கொடுத்த யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்". (யோவான் 6:37, 44) "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார், அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால் பிறந்தவர்கள், "(யோவான் 1:12-13). "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர் களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவர்களுக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். (எபே 1.4-6). மனிதர் தங்கள் மணவாட்டியைத் தெரிந்துகொள்வது போன்று, இயேசு கிறிஸ்துவும் தம்முடைய மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுகிறாரென்று மேற்கூறிய வசனங்களின் மூலம் தெளிவாகிறது. மணவாளன் தான் ஒரு பெண்ணை விவாகத்திற்கென்று தெரிந்துகொள்கிறான். "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவிலை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" (யோவான் 15.16) என்று மணவாளனாகிய இயேசு கூறுகிறார். மணவாட்டி, உலகத் தோற்றத்திற்கு முன்னமே தெரிந்து கொள்ளப்பட்டாள் என்று வேதம் உரைக்கிறது. மணவாட்டியின் தெரிந்து கொள்ளுதலைத் தேவன் தீர்மானித்தார் (எபே 1.10). "தேவனுடைய தெரிந்து கொள்ளுத- ன்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலை நிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு.... " (ரோமர் 9.11) என்று பவுல் கூறுகிறான். இதை வேறு எவ்விதத்திலும் அர்த்தங்கொள்ளமுடியாது. தேவன் தம்முடைய சித்தத்தின்படி மணவாட்டியைத் தேர்ந்தெடுக்கத் தமக்குள் தீர்மானித்திருந்தார். அவர் நித்தியமாயிருப்பதனால் உலகத்தோற்றத்திற்கு முன்பு அது தீர்மானிக்கப்பட்டது.*

*உலகங்கள் உண்டாவதற்கு முன்பு, தேவன் தேவனாக ஆவதற்கு முன்பு (தேவன் என்பதற்கு "வழிபடுவர்" என்று அர்த்தம்; அப்பொழுது அவரை வழிபட யாருமில்லை), அவர் நித்திய ஆவியாக இருந்தபோது, மணவாட்டி அவருடைய சிந்தையி- ருந்தாள், அவருடைய சிந்தையும் நித்தியமாயிருந்தது.*

*"தேவனுடைய சிந்தனைகள் நித்தியமா?" என்னும் கேள்விக்கு விடையளிப்பதன் மூலம் நாம் அநேக காரியங்களையறியலாம். தேவன் தம்முடைய தன்மைகளில்*

மாறாதவர். இதை நாம் ஏற்கெனவே நிரூபித்துவிட்டோம். அவருடைய திறமை முடிவற்றது, (infinite).ஆகையால் அவர் எல்லாமறிந்தவராயிருக்க வேண்டும் (omniscient). அப்படி யெனில் அவர் இப்பொழுது ஒன்றையும் முதன் முறையாக அறிவதில்லை. அவர் எந்தக் காரியத்தைக் குறித்தும் புதிய சிந்தனையுடையவரல்ல. ஏனெனில் அவருடைய சிந்தனைகள் ஆதிமுதல் அந்தம் வரை மாறாதவைகளாயிருக்கின்றன. தேவனுடைய சிந்தனைகள் நித்தியமாயிருக்கின்றன அவைகள் கற்பனை யாயிராமல் உண்மையுள்ளவைகளாயிருக்கின்றன. மனித சிந்தனைகள் வித்தியாசப்பட்டவை, மனிதன் முத- ல் ஒரு படத்தை (blue print) வரைந்து அதை அனுசரித்து அவனுடைய சிந்தனைகளை உருவாக்குகிறான். தேவனுக்கு இது அவசியமில்லை. அவருடைய சிந்தனைகள் நித்தியமாயும் அவரின் ஒரு பாகமாயும் இருக்கின்றன.

ஆதாமைக் குறித்து அவருடைய சிந்தனையுண்டாயிருந்தது. ஆனால் அது முத- ல் உருவாக்கப்படவில்லை. "நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்ட போது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே, அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமதுபுஸ்தகத்தில் எழுதியிருந்தது" (சங் 139:15-16) என்று தாவீது கூறினதன் மூலம் மேற்கூறியது ஒருவாறு விளங்கும். ஆதாம் பூமியிலுள்ள மண்ணி- ருந்து உண்டாக்கப்பட்டு, அவனுடைய ஆத்துமா தேவனால் சிருஷ்டிக்கப்பட்டபோது, அவனைக்குறித்த தேவனுடைய நித்திய சிந்தனை வெளிப்படையாயிற்று.

இவ்வாறு, மோசே, ஏரேமியா, யோவான் ஸ்நானன் முத- யவர்கள் தேவனுடைய சிந்தனையில் உண்டாயிருந்து காலாகாலங்களில் வெளிப்பட்டனர். அதன் பின்பு வார்த்தையாகிய இயேசு (Jesus the Logos) தோன்றினார். தேவனுடைய பிழையற்ற சிந்தனை முழுவதும் உருவாக்கப்பட்டு, அவர் வார்த்தையாகத் தோன்றினார், அவர் சதாகாலங்களிலும் வார்த்தையாகவே இருக்கிறார்.

அவர் உலகத்தோற்றத்திற்கு முன் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்" என்று பவுல் கூறுகிறார். நாம் அவருடைய சிந்தையில் அவரோடு கூட உலகத்தோற்றத்துக்கு முன்னமே இருந்தோம் என்பது அதன் அர்த்தமாகும். அப்படியெனில் தெரிந்து கொள்ளப்பட்டவர் அனைவருக்கும் நித்தியத் தன்மையுண்டு.

*இயற்கை பிறப்பும், தேர்த- ன் மூலம் உண்டாகின்றது என்பதனை நீங்கள் அறிய வேண்டும். ஒரு பெண்ணின் அண்டகோசத்தி- ருந்து* (overies) *கணக்கற்ற முட்டைகள் தோன்றுகின்றன. குறிப்பிட்ட காலத்தில் ஏதோ ஒரு முட்டை மாத்திரம் தாழ இறங்குகிறது, மனித இந்திரியத்தி- ருந்து* (Sperm), *ஏதோ ஒரு அங்குரம்* (germ) *அந்த முட்டையோடு எப்படியோ சேர்ந்து விடுகிறது. மற்றைய அங்குரங்கள் முட்டையோடு சேர முடியுமென்றாலும், அவ்வாறு செய்யாமல் அழிந்து போகின்றன. தேவஞானம் இப்போக்கிற்கு காரண மாயிருந்து, உண்டான குழந்தை ஆண் அல்லது பெண்ணென்றும், இன்னும் அநேக அம்சங்களையும் நிர்ணயிக்கிறது, இதை மனதில் வைத்துக்கொண்டு இளைப்பாறுதலைப் பெற்ற யோசுவாவையும், காலேபையும் குறித்துச் சிந்தியுங்கள். "உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்" (யோவான் 6.49) என்று இயேசு தம்மைச் சூழ்ந்திருப்பவர்களை நோக்கிக் கூறினார். இந்த முற்பிதாக்கள் மாம்சப்பிரகாரம் தெரிந்து கொள்ளப்பட்டு (மற்றைய அங்குரங்களைப் போன்று) மரித்தார்கள். யோசுவாவும், காலேபும் ஆவிக்குரிய பிரகாரம் தெரிந்து கொள்ளப்பட்டு இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தனர்.*

*தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (ஆவிக்குரிய பிரகாரம்) தேவனுடைய நித்திய சிந்தனையினின்று காலாகாலங்களில் உருவாக்கப்பட்டு, வேறுவித பெயரால் அழைக்கப்படுகின்றனர். "ஆதலால் சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும் படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப் பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர் களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும் படிக்கு அப்படி வருகிறது". (ரோமர் 4.16). "அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்- யிருக்கிறதே, அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள். அந்த வாக்குத்தத்தமான வார்த்தையாவது; குறித்த காலத்திலே வருவேன், அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்பதே, இதுவுமல்லாமல், நம்முடைய பிதாவாகிய ஈசாக்கு என்னும் ஒருவனாலே ரெபெக்காள் கர்ப்பவதியானபோது, பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளுத- ன்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிற்கும்படிக்கு, மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ் செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது. அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை*

வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது". (ரோமர் 9: 7-13). "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத் தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்- யிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே, (கலா 3.16), "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்". (கலா 3.29). தேவன் தம்முடைய வாக்குத்தத்தை ஆபிரகாமின் எல்லாச் சந்ததியாருக்கும் கொடுத்திருக்கிறார் (ரோமர் 4.16) என்று பவுல் கூறுகிறான். "நம்மெல்லோருக்கும் தகப்பனாகிய ஆபிரகாம்" என்று அவன் கூறும் போது, அவனையும், மற்றெல்லா விசுவாசிகளையும் ஆபிரகாமின் சந்ததியில் சேர்க்கிறான். பின்னர் இதற்கு விளக்கம் கூறி, "சந்ததி" என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதால் அந்தச் சந்ததி இயேசு கிறிஸ்து வென்றும், அப்படியெனில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாரெல்லாரும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராய் இருக்கின்றனர் எனக் கூறுகிறான். இதையே நாங்களும் உரைக்கிறோம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவரால் முன்குறிக்கப்பட்டு, முன்னறியப்பட்டு, அவருடைய சிந்தையிலும், நினைவுகளிலும் உண்டாயிருந்தனர். இன்னும் விளக்கமாக கூற வேண்டுமெனில், கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி, நித்தியகாலமாய் தேவனுடைய சிந்தையி- ருந்து, அவள் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட காலங்களில் மாம்சத்தில் வெளிப்பட்டனர். மணவாட்டியென்று இவர்கள் பெண்பா- ல் அழைக்கப்படுவது மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவுக்குள் முன் குறிக்கப்பட்டு, நித்திய காலமாய் அவரோடுகூட இருந்து, அநேக அங்கத்தினர்களைக் கொண்ட சரீரமாக தேவனின் தன்மைகளை வெளிப்படுத்துகிறபடியால் அவர்கள் கிறிஸ்துவின் சரீரம் என்றும் அழைக்கப்படுகின்றனர், இதற்கு முன்பு, தேவன் ஒரே அங்கத்தினரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தினார்.

நித்திய சிந்தையாகிய (Logos) தேவன், குமாரனில் வெளிப்பட்டார். தேவத்துவத்தின் பரிபூரணம் சரீரப்பிரகாரமாக இயேசு கிறிஸ்துவுக்குள் வாசமாயிருந்தது. இயேசுகிறிஸ்து மாம்சத்தில் தோன்றிய நித்தியபிதாவாக. குமாரன் என்னும் பதவியைப் பெற்றார். அவருடைய நினைவுகளி- ருந்த நாமெல்லாரும், நம்முடைய சமயம் வரும்போது, மாம்சத்தில் வெளிப்பட்டு, தேவனுடைய குமாரர் என்று அழைக்கப்படும் சிலாக்கியம் பெற்றோம். மறுபிறப்பின் மூலம் நாம் சந்ததியாகவில்லை. அவருடைய சந்ததியாய் நாம் இருந்ததால், மறுபிறப்பு அடைந்தோம். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே மறுபிறப்பு அடைய முடியும். நாம் வித்தாக (சந்ததியாக) இருப்பதன் காரணத்தால் உயிர்ப்பிக்கப்பட்டோம். வித்தல்லாதவர்களிடம் (சந்ததியாயில்லாதவர்கள்) உயிர்ப்பிக்கப்பட ஒன்றுமில்லை.

"மீட்கப்படுதல்" என்னும் வாக்கு திரும்பவும் வாங்கிக்கொள்ளுதல், என்னும் அர்த்தம் பெறும். தேவன், தம்முடைய மரணத்தின் மூலம், இரத்தத்தைச் சிந்தி, தமக்குச் சொந்தமான மணவாட்டியைத் திரும்பவும் வாங்கிகொண்டார். "என் ஆடுகள் என் சத்தத்துக்குச் (வார்த்தைக்கு) செவிகொடுக்கிறது; அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது" (யோவான் 10:3-4). தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எப்பொழுதும் ஆடுகளாகவே இருக்கின்றனர். பன்றியாகவோ, நாயாகவோ இருந்து ஆடுகளாக மாறவில்லை, ஒவ்வொரு இனமும் தன் இனத்தை மாத்திரம் பிறப்பிக்கும். நாம் தேவனுடைய சிந்தையி- ருந்து மாம்சத்தில் தோன்றினதால், ஒரு நாளில் அவர் சத்தத்தைக் (வார்த்தையை) கேட்கத் தான் வேண்டும். அந்த சத்தத்தின் மூலம், நம்முடைய பிதா நம்மை அழைக்கிறாரென்று அறிந்து, நாம் தேவனுடைய பிள்ளைகளென்று உணர்வோம். ஆம், நாமும் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, "பிதாவே, என்னை இரட்சியும், நான் உம்மிடத்தில் வருகிறேன்" என்று கெட்ட குமாரனைப் போல் கதறினோம்.

ஒரு தேவனுடைய குமாரன், அவன் குமாரனென்று அநேக நாட்களாய் அறியாமலேயே இருக்க முடியும். இதற்கு ஒரு உதாரணம்கூற விரும்புகிறேன். ஒரு நாள், ஒரு குடியானவன் கழுகுக் கூட்டி- ருந்து ஒரு முட்டையை எடுத்து, கோழி முட்டைகளோடு அவயம் வைத்தான். குறித்த காலத்தில் எல்லா முட்டைகளும் பொறித்தன. கோழிக் குஞ்சுகள் தாய்க்கோழியோடு சேர்ந்து கொக்கரித்து, குப்பைகளி- ருந்து தீனியைப் பொறுக்கின. கழுகுக் குஞ்சு இதைக் குறித்துக் குழப்பமுற்றது; என்றாலும் ஒருவாறு தீனியைப் பொறுக்கிற்று. ஒரு நாள் தாய் கழுகு ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும்போது, கழுகுக் குஞ்சை கண்டுவிட்டது. அது அதிவேகமாய் தாழவந்து, சத்தம்போட்டு, தன்னிடத்தில் பறந்துவர கழுகுக் குஞ்சை அழைத்தது. இதுவரை கழுகின் சத்தத்தைக் கேட்காத கழுகுக்குஞ்சு, முதன் முறையாக அதைக் கேட்டபோது, ஒருவித உணர்ச்சி அதற்குத் தோன்றி, தாய்க் கழுகிடம் பறந்துசெல்ல வாஞ்சை கொண்டது; என்றாலும் பறக்க முயற்சி செய்ய பயந்தது. மறுபடியும் தாய்க் கழுகு சத்தம் போட்டு அழைத்தது. அப்பொழுது கழுகுக் குஞ்சு சத்தம் போட்டு பயத்தைத் தெரிவித்தது. தாய்க் கழுகு தொடர்ந்து சத்தமிட, தாயின் சத்தத்தைக் கேட்டு கழுகுக் குஞ்சு ஆகாயத்தில் பறந்து சென்றது. கழுகுக் குஞ்சு எப்பொழுதுமே கழுகுக் குஞ்சாயிருந்தது. கோழிக் குஞ்சைப் போன்று சிறிதுகாலம் பாவனை செய்தாலும், அதற்குத் திருப்தியில்லை. தாய்க் கழுகின் சத்தம் கேட்டவுடனே, அதற்குரிய இடத்திற்குப் பறந்துசென்றது. அவ்வாறே, உண்மையான தேவகுமாரன், வார்த்தையின் மூலம் ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கும் போது, அவன் யாரென்பதை உணர்ந்து, மகத்தான

*தீர்க்கதரிசி கழுகினிடத்தில் பறந்து சென்று அவரோடு சதா காலங்களிலும் உன்னதங்களில் வீற்றிருப்பான்.*

*பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்த முக்கியமான கட்டத்திற்கு நாம் வருவோம். "நாம் புத்திர சுவீகாரத்தையடையும் படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத் தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்". (கலா 4:4-7). ஆம்,இயேசு கிறிஸ்து தோன்றி, சிலுவையில் மரித்து மரணத்தின்மூலம் அவருடைய புத்திரராகிய நம்மை மீட்டுக்கொண்டார். நம்மைப் புத்திரராக அவர் ஆக்கிக்கொள்ளவில்லை, ஏனெனில் நாம் தொடக்கத்தி- ருந்தே புத்திரராயிருக்கிறோம். புத்திர ஸ்தானத்தை அவர் நமக்கு மீண்டும் அளித்தார். மாம்சத்தி- ருந்த போது, நாம் அவருடைய புத்திரரென்று அறிந்து கொள்ளவில்லை. பிசாசினால் நாம் அடிமைப்படுத்தப்பட்டோம், என்றாலும் நாம் அவர் புத்திரர், "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்". பெந்தேகோஸ்தே நாளன்று அவருடைய புத்திரரின்மேல் பரிசுத்த ஆவி இறங்கினது. கொரிந்து பட்டினத்திலும் வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த அவருடைய புத்திரரின் மேல் பரிசுத்த ஆவி இறங்கினது.*

*அப்படியெனில் பரிசுத்த ஆவி நம்மைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணுவதே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அர்த்தம். இதுதான் மறுபிறப்பு. நாம் வசனத்தைக் கேட்டு, மனந்திரும்பி, தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையைத் தண்ணீரில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று நிறைவேற்றிய பிறகு, பரிசுத்த ஆவி நம்மை நிரப்பி, மறுபிறப்பின் அனுபவத்தைக் கொடுக்கிறது.*

*தேவன் ஒருவரே என்னும் சத்தியத்தை எல்லாரும் விசுவாசித்தால், நான் இதுவரை கூறியது சுலபமாக விளங்கும். தெய்வத்துவத்தில் மூன்று ஆட்களில்லை. தேவன் ஒருவரே. நாம் கிறிஸ்துவின் ஆவியினால் மறுபிறப்பு அடைந்து, பின்பு பரிசுத்த ஆவியினால் வல்லமையைப் பெறுகிறோம் என்று சிலர் நினைப்பது முற்றிலும்*

தவறாகும். அது உண்மையாயின், நம்முடைய இரட்சிப்பில் பிதாவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அவரை அவமதிக்கிறவர்களாயிருப்போம். இரட்சிப்பு கர்த்தருடையது என்று வேதம் போதிக்கிறது. மூன்று கடவுள்கள் இருப்பார்களாயின், பிதாவுக்கும் அதில் பங்கிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவே தேவனென்றும் அவரே விசுவாசிக்குள் வாசம் செய்கிறாரென்றும் வேதம் தெளிவாகக் கூறுகிறது. பிதா வேறொரு தேற்றரவாளனை அனுப்புவாரென்று இயேசு கூறினார். (யோவான் 14.16). அவர் (இயேசு) அவர்களோடு வாசம்பண்ணி, பின்பு அவர்களுக்குள் இருப்பாரென்று 17-ம் வசனம் கூறுகிறது. 18-ம் வசனத்தில், அவரே அவர்களிடத்தில் வருவதாக உரைக்கிறார். பின்னர் சீஷர்களிடத்தில் (23-ம் வசனம்), “நாங்கள் (பிதாவும், குமாரனும்) அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்” என்று அவர் கூறுகிறார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எல்லாரும் ஒரே நேரத்தில் வருகிறார்கள்; ஏனெனில் தேவன் ஒருவரே. இயேசு கூறியவாறே, பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவி இறங்கினது. ஆவி இருமுறை வந்து மக்களை அபிஷேகிப்பதில்லை. அநேகர் சத்தியத்தை அறியாதவர்களாய், பாவ மன்னிப்புக்கென்று இயேசுவை விசுவாசித்து அதோடு நின்றுவிடுகின்றனர். அவர்கள் தொடர்ந்து பரிசுத்த ஆவியைப் பெறுவதில்லை.

ஆத்துமாக்கள் தொடக்கத்தி- ருந்து ஜீவனோடிருக் கின்றன (Preexistence of souls) என்னும் மார்மோனின் கொள்கையை நான் நம்புவதாக நீங்கள் எண்ண வேண்டாம். இதைக் குறித்தும், மறுஜென்மம் எடுப்பதைக் குறித்தும் எனக்கு நம்பிக்கையில்லை. ஒரு மனிதன் நித்தியமாக முன்குறிக்கப்படவில்லை என்பதை கவனிக்கவும். ஒரு மனிதனின் தோற்றம் தேவனுடைய சிந்தையில் முன்குறிக்கப்படுகிறது. மனித ஞானம் கிரகித்துக்கொள்ள முடியாத முன் காலங்களில், நித்திய சிந்தையைக் கொண்ட நித்திய தேவன் “பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலிருக்கையில் யாக்கோபைச் சிநேகித்து ஏசாவை வெறுத்தேன்” என்று தீர்மானித்தார். இது தேவனுடைய சிந்தனையேயன்றி வேறொன்றுமில்லை. அந்த சிந்தனை உருவாக்கப்பட சமயம் வந்தபோது, ஏசாவும், யாக்கோபும் தோன்றி, யாக்கோபு தேவனுடைய தீர்மானத்தின்படி மீட்கப்பட்டான். யாக்கோபு தேவனின் சந்ததியாயிருந்தபடியால், அவனுடைய புத்திர பாகத்தையும், அவன் தேவனோடு செய்த உடன்படிக்கையையும் கௌரவித்தான். நீங்களும் உண்மையான சந்ததியாயிருந்தால், தேவனுடைய வார்த்தையைக் கேட்பீர்கள்; அப்பொழுது ஆவியானவர் உங்களைக் கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பண்ணி, உங்களை நிரைத்து, வல்லமைப்படுத்துவார். உங்களுடைய காலத்துக்குரிய சத்தியத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்ட ராஜரீக சந்ததியாவார் (Royal Seed). ஆவியானவர் உரைத்ததைக் (வார்த்தையை) கேட்டு, யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார். வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவுடனே, பரிசுத்த ஆவி அவர்மேல் இறங்கி, பின்னர் "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்னும் சத்தமுண்டாயிற்று. "இவர் என்னுடைய குமாரனாகிவிட்டார்" என்று அந்தச் சத்தம் கூறவில்லை. இயேசு இதற்கு முன்பே குமாரனாயிருந்தார். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபிறகு, வல்லமையான கிரியைகளைச் செய்து, அக்காலத்திற்குரிய வெளிப்பாட்டை தேவனிடத்தி- ருந்து பெற்றார். பெந்தேகோஸ்தே காலத்திலும்,அதைத் தொடர்ந்த காலங்களிலும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு விசுவாசியையும், ஆவியானவர் முன்னறிந்து அவனை நிரப்பி, வல்லமையைக் கொடுத்து, அவன் வாழும் காலத்துக்குரிய வெளிப்பாட்டையும் அளிக்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்ட ஏழு சபைகளின் காலமும், புறஜாதியார் இரட்சிக்கப்பட தேவன் குறித்த காலமாகும். "புறஜாதியாரின் நிறைவு" என்று இது வேதத்தில் அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு காலத்திற்குரிய செய்தியும், அக்காலத்துக்கென்று நியமிக்கப்பட்ட தூதனுக்குக் கொடுக்கப்படுகிறது. அல்லாமலும், ஒவ்வொரு காலத்தின் செய்தியும்" ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்னும் கட்டளையினால் முடிவு பெறுகிறது.

ஒவ்வொரு காலத்திற்கென்று நியமிக்கப்பட்ட தூதனும் அக்காலத்துச் சபையின் உண்மையான தூதனாவான். ஒரு காலத்திற்கு ஒரு தூதன் மாத்திரமே நியமிக்கப்படுகிறான் என்பதை கவனிக்கவும். அவன் தேவனிடத்தி- ருந்து வெளிப்பாட்டைப் பெற்று உண்மையான சபையும், கள்ளச் சபையும் கொண்ட "சபைகளுக்கு" அதை அறிவிக்கிறான். ஆவியானவர் தூதனின் மூலமாக அளிக்கும் செய்தியைக் கேட்கத் திறமை பெற்றவர்களே, அதை ஏற்றுக் கொள்கின்றனர். அவர்களில் ஒவ்வொருவனும், தூதன் தேவனிடத்தி- ருந்து பெற்ற செய்தியைக் கேட்டு, அதை ஏற்றுக் கொள்கிறான்.

பவு- ன் காலத்துக்குரிய செய்தி, பவுலுக்கு மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டது. அவன் புறஜாதிக்கென்று நியமிக்கப்பட்ட அப்போஸ்தலனும் தீர்க்கதரிசியுமென்று மற்றெல்லா அப்போஸ்தலரும் ஒப்புக்கொள்கின்றனர். அவன் ஆசியாவுக்குப் போக மனதாயிருந்த போது, அவன் மூலமாய் ஆவியானவர் கூறுவதை ஆசியாவிலுள்ள மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை தேவன் அறிந்து, அவன் அங்கு போகாமல் தடை செய்தார். அதே சமயத்தில், மக்கதோனியாவிலுள்ள தேவனுடைய பிள்ளைகள்

ஆவியானவர் கூறுவதை ஏற்றுக் கொள்ளுவார்களென்பதை அறிந்து அங்கு போக ஆவியானவரால் ஏவப்பட்டான்.

ஒவ்வொரு சபையின் காலத்திலும் இதே சம்பவம் நிகழ்கிறது. ஒரு ஸ்தலத்தில் வாழும் தூதன், அக்காலத்துக்குரிய சத்தியத்தைப் பெறுகிறான். இச்சத்தியம் மற்றவர்களுக்குப் போதிக்கப்பட்டு, அவர்கள் மூலம் இது மற்றெல்லா இடங்களிலும் பரவுகிறது. சத்தியத்தைப் பரப்புகிறவர்கள் சில சமயம் தூதன் போதித்துக் கொடுத்ததை மாத்திரம் போதிக்காமல், சிலவற்றைச் கூட்டியும் குறைத்தும் போதிப்பதால், சத்தியம் கறைபட்டு, அதன் காரணமாக எழுப்புதல் உண்டாகிறதில்லை. பவுல்,தான் கூறியதை மாத்திரம் போதிக்க ஊழியர்களுக்குக் கட்டளையிடுகிறான். "ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக் கடவன். தேவ வசனம் உங்களிடத்தி- ருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்திற்கு மாத்திரமா வந்தது?" (1 கொரி 14:36-37). ஆவியானவரின் சத்தத்தை மாத்திரம் நாம் கேட்கக் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனிடத்தி- ருந்து பெற்ற வெளிப்பாட்டை பவுலும்கூட மாற்றக்கூடாது. தூதர்களின் மூலமாய் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, கேட்டவாறு சபைகளுக்கு எடுத்துரைப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது.

நீங்கள் கிறிஸ்தவர்களாயிருந்தால் ஆவியானவர் போதிப்பதை ஏற்றுக் கொள்வீர்கள். ஒவ்வொரு சபையின் தூதனும், அச்சபையின் காலத்துக்குரிய சத்தியத்தைப் போதிப்பான். அக்காலத்து ஜனங்கள் இதை ஏற்றுக் கொள்ளும்போது, அங்கு எழுப்புதல் உண்டாகிறது. ஒவ்வொரு காலத்திலும் ஆவியானவர்,"நீங்கள் தேவனுடைய வசனத்தைப் புறக்கணித்தீர்கள், மனந்திரும்பி, சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கடிந்து கொள்கிறார். வசனத்தைப் புறக்கணித்தலே தேவனுடைய வருத்தத்தின் காரணமென்று ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் முடியவுள்ள வேதத்தின் புத்தகங்களனைத்தும் கூறுகின்றன, இழந்து போன அவருடைய ஆதரவைப் பெற ஒரே பரிகாரமுண்டு. நீங்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எபேசு சபை தொடங்கி ஒவ்வொரு சபையின் காலத்தையும் நாம் ஆராயும்போது, இது உண்மையென விளங்கும், நாம் வாழும் இக்கடைசிக் காலத்தில் தேவனுடைய வார்த்தை முழுவதும் அந்தகாரப்பட்டு, மக்கள் நிலைதவறி, முடிவில் உபத்திரவக் காலத்தில் பங்குகொள்வர் என்பதை நாமறியலாம்.

*நீங்கள் உண்மையாகப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தால், எல்லாவற்றைக் காட்டிலும் தேவனுடைய வார்த்தையை அதிகம் மதித்து, அவருடைய வாயி- ருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் நீங்கள் பிழைப்பீர்கள்.*